Registered No. M-4483 Madras War Review (TAMIL) 10-3-1944

யுத்த சஞ்சிகை

மலர் IV 1944-ம்௵ மார்ச்சு௴ 10௳, வெள்ளிக்கிழமை இதழ் 27

உலகத்திலேயே மிகச் சிறந்தவர்களில் - - -

மேன்மை தங்கிய சர் க்ளாட் ஆக்கின்லெக்.

இந்தியாவில் உள்ள படையினரோடு சென்ற 40 வருஷங்களாக நான் அடைந்த அனுபவத்தைக் கொண்டும், அவர்களுடனிருந்து வாழ்ந்தும் போராடியும் வந்த அனுபவத்தைக் கொண்டும், அவர்கள் உலகத்திலேயே மிகச் சிறந்தவர்களைச் சேர்ந்தவர்கள் என்று நான் சொல்லுவேன்.

ஆனால், என்ன தான் கெட்டிக்காரர்களாக போரில் விளங்கினாலும், நல்ல தலைவர்க ளில்லா விட்டால், போரில் வெற்றி பெற முடியாது. இன்று இந்தியாவில் முக்கியமான பிரச்சினை, நல்ல தலைவர்கள் தேவை என்பது தான். பிறவியிலேயே தலைவர்களாயுள்ளவர்கள் மிகக் கொஞ்சம் பேர்கள் தான். பெரும்பாலோர் தலைவர்களாக்கப்பட வேண்டியவர்கள்.

உத்தியோகஸ்தர்களாகவோ, வைசிராய் கமிஷன் உத்தியோகஸ்தர்களாகவோ, படையினராகவோ ஊழியம் செய்ய ஆவலாயிருக்கும் இளைஞர்கள், நம் படைகளுக்குத் தேவை. தன் நாட்டை எதிரிகளிட மிருந்து காப்பாற்றுவதை விட, கௌரவமான தோர் வேலை வேறெதுவு மிருக்க முடியாது. அறிவுத் திறனும் புத்திக் கூர்மையு முள்ளவர்கள் தேவை. அவர்கள் ஆபத்துக் காலங்களில் விரைவாக யோசித்து நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளும் பயிற்சி யுள்ளவர்களா யிருக்க வேண்டும். கஷ்ட நஷ்டங்களைச் சகிக்கக் கூடிய உடலுறுதி யுள்ளவர்களாகவும் அவர்கள் இருக்க வேண்டும்.

போரில் படையினருடைய உயிர்கள் படைத் தலைவரின் கையில் தான் இருக்கின்றன. இந்த உயிர்களுக்குப் பொறுப்பாளிகள் படைத் தலைவர்கள் தான்.

முகத் தோற்றம், தன் முயற்சி, மன உறுதி, ஆபத்துக் காலத்திலும் மன அமைதியோ டிருத்தல், ஆகிய தலைவருக்குரிய முக்கியமான குணங்களுள்ளவர்கள் இப்போது மிகவும் தேவையா யிருக்கிறது.

இப்படிப் பட்டவர்களை நீங்கள் உதவுவீர்க ளென்று நான் எதிர்பார்க்கிறேன். இவர்களை உதவ, உங்களால் முடியு மென்றும், உதவுவீர்க ளென்றும் நான் உறுதி யோடிருக்கிறேன்.

மே. த. சர் க்ளாட் ஆக்கின்லெக், இந்திய பிரதம படைத்தலைவர், அலிகார் சர்வகலாசாலையில் மார்ச்சு மாதம் 6-ம் தேதி கூறியது.

பொருளடக்கம்.

	பக்கம்.		பக்கம்.
முகப்புப் படம்: சர். க்ளாட் ஆக்கின்லெக் ..	1	சேவாதாரணித் திட்டத்தின் சிறப்பு	7
உலகத்திலேயே மிகச் சிறந்தவர்களில் - - ..	1	செஞ்சிலுவை ஒலி பெருக்கிப் பிரசங்கம் ..	8
முரசொலி	2	அக்கிரமச் சேமிப்பையும் அநியாய லாபத்தையும் நிறுத்துங்கள்	9
படையின் நன்றி	2	ஷின் மலையில் சிக்னல் படையினர் அருஞ் செயல்	10
தலையங்கம்: ஆகாயப் படையின் அவசியம் ..	3	மோட்டார் பயிற்சி சாலைக்குத் தளபதி விஜயம் ..	10
போர் முனை நிகழ்ச்சி விளக்கம்	4	யுத்த நெருக்கடியும் அரசாங்க உதவியும் ..	11
அக்கிரமச் சேமிப்பையும் அநியாய லாபத்தையும் தடுக்க அரசாங்கததார் மேற் கொண்டுள்ள முறைகள்	5	கூடாரத்தில் இந்தியப் படை ஆஸ்பத்திரி ..	11
வானொலி நாட் குறிப்பு	6	யுத்த நாட் குறிப்புக்கள்	12

முரசொலி

"நாம் ஐரோப்பாவிற்குள் நுழைய வேண்டும்; ஜெர்மனிக்குள் புக வேண்டும். ஜெர்மன் படைகளின் குரல்வளையைப் பிடிக்க வேண்டும். அதைப் பிடித்து உலுக்கி அதன் உயிரைப் போக்க வேண்டும். ஜெர்மன் படை உத்தியோகஸ்தர்களையும், இராணுவப் பழம் பெருமையையும், ஆதிக்க வேட்கையையும், கொடுமைப் பழக்கத்தையும் அடியோடு ஒழிக்க வேண்டுமென்று கங்கணங் கட்டிக் கொண்டிருக்கிறோம்."

— மிஸ்டர் ஹெர்பட் மாரிசன்,

பிரிட்டிஷ் உள் நாட்டு மந்திரி, ஷெப்பீல்டில் மார்ச்சு மாதம் 3-ம் தேதி கூறியது.

* * * * * *

படையின் நன்றி

சென்னை கூட்டு யுத்த கமிட்டி கௌரவக் காரியதரிசிக்குக் கீழ்க் கண்ட கடிதம் வந்து சேர்ந்திருக்கிறது :—

"இராக்கிலும் ஈரானிலும் சேவகம் செய்து கொண்டிருக்கும் படைத் தலைவரின் சார்பாகவும் படையினரின் சார்பாகவும், கிருஸ்மஸ் சமயத்தில் தாங்கள் அனுப்பிய வெகுமதிகள் பற்றி நன்றி கூற வேண்டிய பெருமை எனக்கு மீண்டும் வாய்த்திருக்கிற தென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்."

"இந்த வெகுமதிகள் வழங்கப்படுவதற்கு, பண உதவி செய்தவர்களுக்கு எங்களுடைய நன்றியைத் தெரிவிப்பீர்களென்றும், இந்த வெகுமதிப் பொருட்களைத் திரட்டி அவற்றைப் பார்சல்களாகக் கட்டி எங்களுக்கு அனுப்பியவர்கள் எங்களிடம் கொண்டிருந்த அக்கரையை நாங்கள் பெரிதும் பாராட்டுவதாகவும், அவர்களுக்கு அறிவிப்பீர்களென்றும் நம்புகிறேன்."

அடுத்த கிருஸ்மஸுக்குள்ளாக எல்லா இந்தியப் படையினரும் தத்தம் சொந்த ஊர்களில் போய் இருப்பார்களென்றும் எதிர் பார்ப்போமாக! இந்த வருஷம் என்ன நிகழ்ந்தாலும், அவர்கள் மகிழ்ச்சியோடு சகித்துக் கொண்டிருப்பார்களென்று நீங்கள் நிச்சயமாக நம்பலாம். ஏனென்றால், இந்தியாவிலுள்ள அவர்களுடைய நண்பர்கள் தம்மை மறந்து விடவில்லை என்று, அவர்களுக்குத் தெரியும்.

(ஒப்பம்) * * *

பிரிகேடியர், டிபுடி அட்ஜுடெண்ட் ஜெனரல்.

யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் IV | 1944-ம் ௵ மார்ச்சு ᵐ 10௳, வெள்ளிக்கிழமை | இதழ் 27

ஆகாயப் படையின் அவசியம்

லெனின் கிராட் பகுதியில் சர்வசாதாரணமாக ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் முதலில் தற்காப்புப் போராட்டமாயிருந்தது. பிறகு படிப்படியாக மாறி இப்போது பூரண எதிர்ப்புப் போராட்டமாக மாறி விட்டது. இது பால்டிக் நாடுகளையும் விடுவிக்கத் தக்க நிலையில் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பின்லாந்து வளைகுடாவிலிருந்து ழலோபின் கோட்டை ஏறக்குறைய 500 மைல். இங்கே தான் எஸ்டோனியா, லாட்வியா, லிதுவேனியா, ஆகிய மூன்று குடியரசு நாடுகளும் இருக்கின்றன. இவற்றை ஜெர்மன் படைகள் காவல் புரிந்துவருகின்றன. இந்தக் காவல் படைகளைத் தகர்த்து முறியடிக்க, ரஷ்யப் படைகள் முன்னேறுகின்றன. இந்தப் போர் முறையில் இரண்டு வகை முக்யத்துவங்கள் அடங்கியிருக்கின்றன. (1) அரசியல் முக்யத்துவம். (2) இராணுவ முக்யத்துவம். இந்த மூன்று சிறு சுயேச்சை நாடுகளும் ஸோவித் யூனியன் ஆதிக்கத்துக்கு இனி உட்பட்டுவிடும் என்றாலும், மாஸ்கோவில் சமீபத்தில் வாக்குறுதி கொடுக்கப்பட்டபடி, சுயராஜ்ஜியம் கட்டாயம் அவற்றிற்கு வழங்கப்படும். அந்நாடுகள் ஜெர்மானியர் வசமிருந்து மீட்கப்பட்ட பிறகு, புதிய ரஷ்ய சட்டங்களின்படி அமையும். இந்த சட்டங்கள் நாஜி ஆட்சி முறைக்கு முற்றும் முரண்பட்டவை. இவற்றை மீட்பதனாலே இப்பொழுது ஜெர்மனியோடு தோழமை பூண்டிருக்கும் பின்லாந்தும் பாதிக்கப்படநேரும். இதன் பயனாக ஜெர்மனிக்கும் பின்லாந்துக்கும் உள்ள தொடர்பு அறவே அற்றுவிடும். ரஷ்யர்களுடைய நிலைமையும் தரையிலும், கடலிலும், ஆகாயத்திலும் பெரிதும் பலப்படும். இப்பொழுதே பின்லாந்து வளைகுடாவின் தென் பகுதி, ரஷ்யர்களின் வசமாகி விட்டது. ஆகவே தான், சென்ற வாரம் பின்லாந்துக்குத் தாம் அளிக்கும் ஒப்பந்த நிபந்தனைகளை ஒலி பெருக்கி மூலம் ரஷ்ய அரசாங்கம் அறிவித்தது. இந்த நிபந்தனைகள் கூடிய வரை மிதமானவை என்று சொல்லலாம். ஏன் என்றால், ரஷ்யர்களுக்கு விரோதமாக ஜெர்மானியர்களுக்கு உடந்தையாய் பின்லாந்து பெரும் உதவி செய்திருக்கிறது. பின்லாந்துக்காரர்கள் புத்திசாலிகளாயிருந்தால் ரஷ்யர்கள் கூறியுள்ள நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளுவார்கள்.

முற்கூறிய மூன்று குடியரசு நாடுகளிலும் எஸ்டோனியா தான் வடக்கிலுள்ளது. பின்லாந்து வளைகுடாவிற்கும் பேய்பஸ் ஏரிக்கும் நடுவில் உள்ளது 30 மைல் தூரம். இதன் வழியாகத்தான் ரஷ்யப் படைகள் முன்னேறித் தாக்குகின்றன. நார்வா, எஸ்டோனியாவின் பழைய தலைநகரம். இங்கிருந்து டால்லின் என்னுமிடத்திற்கு ஒரு ரெயில்வே போகிறது. இந்த ரெயில்வேயைத் துண்டித்து நார்வா நகரத்திலுள்ள ஜெர்மன் படைகளை ரஷ்யப் படைகள் வளைந்து கொண்டன. நார்வா நகரமோ வெகு நன்றாகப் பாதுகாக்கப்பட்டிருந்தது. அது இப்போது குலைந்து விட்டதால் ஜெர்மன் பாதுகாப்பும் குலைந்துவிட்டது என்று சொல்லலாம்.

பைப்பஸ் ஏரியின் தென்கோடியில் ஸ்கோப் என்னும் ஒரு முக்கியமான ரெயில்வே ஜங்ஷன் இருக்கிறது. இங்கே ஆறு லைன்கள் சந்திக்கின்றன. இங்கிருந்து தான் பொலோட்ஸ்க் என்னும் தெற்கேயுள்ள கேந்திர ஸ்தானத்திற்கு ஒரு லைன் போகிறது. இந்த ஆறு லைன்களில் நான்கு ஏற்கனவே துண்டிக்கப்பட்டுவிட்டன. இப்போது ஜெர்மானியர்களுக்கு பயன்படக் கூடியது இரண்டு தான். அவற்றுள் ஒன்று ஸ்கோப்-வில்னு லைன். இதையும் ரஷ்யர்கள் தகர்த்துக் கொண்டிருக்கிறார்கள். வட ரஷ்யாவில் ஜெர்மானியர்களுடைய நிலைமை இது. இனி மற்ற இடங்களில் அவர்களுடைய நிலைமை எப்படியிருக்கின்றது என்று சற்று கவனிப்போம். பிரான்ஸிலோ நேச நாடுப் படைகள் எந்த நிமிஷம் தாக்குமோ என்று ஜெர்மானியர்கள் கடுமையான ஆயத்தங்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். இது மட்டுமல்ல. பிரான்சுக்குள்ளாகவே நாட்டுப் பற்றுள்ள மக்களின் உணர்ச்சி நாளுக்கு நாள் ஓங்கிக் கொண்டு வருகிறது. இவர்களுடைய உணர்ச்சி மிகுதியினால், ஜெர்மானியர்களுக்கு விரோதமான குழப்பங்கள் ஏற்படக் கூடும். ஆகவே இதைத் தடுக்கவேண்டியது அவர்களுடைய கடமையாகும். பிரன்சு, ஜெர்மனியின் மேற்கு அரண்போல் அமைந்து இருக்கிறது. ஆகவே, பிரன்சைக் காப்பாற்ற வேண்டியது ஜெர்மனியின் முக்கிய கடமைகளில் ஒன்று.

இத்தாலியிலோ ஆன்ஸியோ கடற்கரைப் போராட்டத்தில் ஜெர்மானியர்கள் மிகுந்த வசதிகள் பெற்றிருந்துங் கூட, நேச நாட்டுப் படைகளை வெல்லக் கூடவில்லை. நேச நாட்டுப் படைகளோ பல வித இடுக்கண்களுக்கு உள்ளாகி யிருந்தும் சிறுகச் சிறுக முன்னேறிக் கொண்டு தான் வருகிறார்கள். இவர்களுடைய முன்னேற்றத்தைத் தடுக்க, ஜெர்மானியர்களால் முடியாது போகுமானால், இலகுவில் இத்தாலியை இழப்பது மட்டுமன்றி, இத்தாலியிலிருந்து நேசநாட்டுப் படைகள் ஜெர்மனியைத் தாக்கவும் கூடும். ஆகவே இதையும் தவிர்க்க வேண்டியது ஜெர்மனியின் நீங்காக் கடமை. யூகோஸ்லாவியாவிலோ ஜெர்மானியர்களுடைய ஆதிக்கம் வெகு விரைவில் குறைந்து கொண்டு வருகிறது. மார்ஷல், டைட்டோவின் படைகள், வெகு மும்மரமாக முன்னேறிக் கொண்டிருக்கின்றன. ஜெர்மானியர்கள் தம்

ஆதிக்கத்தை இங்கேயும் நிலை நாட்ட வேண்டும். இவை எல்லாவற்றிற்கும் மேலானது ஜெர்மனியின் தற்காப்பு. இதில் முதல் அம்ஸம், மக்களின் மனோ உறுதி. அவர்களுடைய மனோ உறுதி குறைந்து விட்டது என்பதற்கு பல சான்றுகள் உண்டு. இரவும் பகலும் அந் நாட்டில் குண்டுமாரி பெய்து கொண்டே இருக்கிறது. சாதாரணமாக இடைவிடாது மழை பெய்து கொண்டிருந்தாலே மக்கள் படும் அல்லல்கள் சொல்லுந் தரமல்ல. குண்டு மழை பெய்தால், அந் நாட்டு மக்கள் அதை எப்படிச் சகிப்பார்கள் என்று வாசகர்களே யூகித்து உணர்ந்து கொள்ளட்டும்.

முற் கூறிய எல்லாப் போர் அரங்கங்களிலும் முக்கியமாக பங்கெடுத்துக் கொள்வது விமானப் படை. தற்காலப் போராட்டங்களில் தரைப் படைக்கும் கப்பற் படைக்கும் ஆக்கந்தர வல்லது விமானப் படை தான். விமானப் படை எங்கே வலிமை மிகுந்திருக்கின்றதோ அங்கு தான் வெற்றி என்பது கண்கூடு. ஆகவே தான், இரு வகைகளில் நேச நாடுகள் தீவிரமாக முயற்சித்துக் கொண்டிருக்கின்றன.

(1) ஜெர்மானியின் விமான உற்பத்தியை, முளையிலேயே கிள்ளி எறிவது.

(2) அமெரிக்க பிரிட்டிஷ் விமான உற்பத்தியைப் பல மடங்கு பெருக்குவது. அது மட்டுமா, ரஷ்யாவுக்கும் மற்ற நேச நாடுகளுக்கும் விமானங்களை ஏராளமாக உற்பத்தி செய்து அனுப்புவதில் அமெரிக்கா முனைந்திருக்கிறது. ஆகவே நேச நாடுகளுக்கு விரைவில் வெற்றி நிச்சயம் என்று திட்டமாகச் சொல்லலாம்.

போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

அரக்கான் மௌண்ட் பேட்டன் பிரபுவுக்கு வேவல் பிரபு பாராட்டு

தென்கிழக்காசிய நேசநாட்டுப் படைகளின் மகா தலைவரான லார்ட் லூயி மௌண்ட் பேட்டன் அவர்களுக்கு மேன்மைதங்கிய வேவல் பிரபு, அரக்கானில் அடைந்த வெற்றியைப் பாராட்டி ஒரு செய்தி யனுப்பி யிருக்கிறார். "மகா கடுமையான நிலைமையில எவ்வளவு மன உறுதியோடும் கெட்டிக்காரத் தனத்தோடும் படைத் தலைவர்களும் படையினரும் சமாளித்தார்கள் என்பதை மிகுந்த அக்கரையோடும் ஆச்சரியத்தோடும் கவனித்துக் கொண்டிருந்தேன்" என்று கூறுகிறார். அரக்கான் போராட்டம் எவ்வளவு கடுமையானது என்னும் அனுபவமுடைய ஒருவர், இப்படிப் பாராட்டுவதி லிருந்து, இந்தப் பாராட்டுதலின் மதிப்பு அதிகரிக்கிறது.

1943-ம் வருஷம் வேவல் பிரபு அரக்கான் போராட்டத்தை நடத்தினார் என்பது இங்கே ஞாபகப்படுத்திக் கொள்ளத் தக்கது. அப்போது நம் படைகளுக்கு வெற்றி கிடைக்கவில்லை. ஏனென்றால், நமது படைகள் காட்டுப் போராட்டத்தில் அப்போது பயிற்சி பெற்றிருக்க வில்லை. என்றாலும் அந்தக் கஷ்டமான நாட்டில் எதிரியைத் தாக்க வேண்டிய அவசியம் நேர்ந்தது. எதிரியை அசரப்போட்டு, போர்த் தந்திர முறைகளைக் கொண்டு வெற்றி பெற்றுவிடலா மென்று விரும்பினார்கள். அவர்களுக்குக் கப்பல் படையுதவிமட்டு மிருந்திருந்தால், நிச்சயமாக வெற்றி கிடைத்திருக்கும். அங்கே அப்போது தோல்வி தான் கிடைத்தது. வேவல் பிரபு இந்தியா வைசிராயாகு முன்பு "அட்லாண்டிக்" என்னும் ஒரு அமெரிக்கப் பத்திரிகையில் அரக்கான் போராட்டத்தைக் குறித்து எழுதியதாவது :—

"இந்தப் படையினர் அனுபவ மில்லாதவர்கள். ஜப்பானியப் படைகளோ நல்ல பயிற்சி பெற்றவை. ஆகவே இவர்களை எளிதில் வென்று விட்டார்கள். அன்றியும் அவர்களுக்குப் போக்கு வரவு வசதிகளும் வசமாயிருந்தன. இதுபற்றி இவர்கள் சற்று மனத் தளர்வடைந்தார்கள். என்றாலும், இந்தியப் படைகளுக்கு அதனால் இழிவு எதுவு மில்லை. இவர்களில் ஒரு சிலருக்கு நான் ஒரு வேலை யிட்டேன். அந்த வேலையைச் செய்து அவர்கள் பழக்க முடையவர்களல்ல; அதைச் செய்து முடிக்கும் திறமையுடையவர்களு மல்ல. அந்தவேலையைச் செய்து முடிக்க, அவர்களால் முடியவில்லையானால், அதற்கு நான் தானே பொறுப்பாளி. உண்மையிலேயே ஜப்பானியர்களோடு எதிர்த்து நின்று போராடவேண்டிய சமயம் வருகிறபோது, இந்தியப் படையினர் எல்லா வகைகளிலும் தகுதியோடிருப்பார்கள் என்று நான் உறுதியாகக் கூறுவேன். சென்ற மாதம் அந்தச் சந்தர்ப்பம் நேர்ந்தது. ஜப்பானியர்களை விட இந்தியப் படையினர் மேலானவர்கள் என்பதை, அப்போது மெய்ப்பித்து விட்டார்கள்."

* * *

யுத்த முயற்சி : இந்தியாவின் மகத்தான உதவி.

இந்தியா போராட்டத்தி லிறங்கி 4½ வருஷங்கள் ஆகி விட்டன. தாம் போராட்டத்தில் மற்றவர்களைப் போலவே கெட்டிக்காரர்கள் என்று இந்தியப் படையினரும் பெயர் வாங்கி விட்டார்கள். சில வகைகளில் மற்ற நாட்டினரை விட மிஞ்சியும் விட்டனர். இந்த 4½ வருஷங்களில் இந்தியப் படையினரின் எண்ணிக்கை 10 பங்கு உயர்ந்து விட்டது. மூன்று கண்டங்களில் இவர்கள் சேவகம் செய்திருக்கின்றனர். ஆப்பிரிக்கா, ஐரோப்பா, ஆசியா ஆகிய மூன்று கண்டங்களிலும் போர் முனைகளில் இவர்கள் காட்டிய வீரத்தையும் தைரியத்தையும் மாபெருந் தலைவர்களுங் கூடப் பாராட்டி யிருக்கிறார்கள்.

"இந்தியா எவ்வளவு உயர்வான அளவிற்கு யுத்த முயற்சியி லிருக்கிறதென்று எனக்கு நேர்முகமாகத் தெரியும். இந்தியாவின் உதவி யின்றி மத்திய கிழக்குப் பகுதிகளை நாம் பிடித்திருக்க முடியாது"

என்று சென்ற வருஷம் வேவல் பிரபு சொன்னார்.

இந்தியப் படையினர் சாதித்துள்ள அருஞ் செயல்களைக் குறித்து பிரிட்டிஷ் பிரதம மந்திரி மிஸ்டர் சர்ச்சில் கூறியதாவது :—

"இந்தியப் படையினரின் உயரிய புகழும், கூர்க்கப் படையினரின் அஞ்சா நெஞ்சமும், உயரிய செயல்கள் புரியும் படி அவர்களைச் செய்கின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில், ஆப்பிரிக்காவிலும், தூரக் கிழக்கு நாடுகளிலும், இந்தியாவிலேயுங் கூட, அவர்கள் சாதித்துள்ளவை பற்றி, இந்தியாவிலுள்ள சுதேச மன்னர்களுக்கும், இந்திய மக்களுக்கும், நமது நெருங்கிய நண்பரான ஹிஸ் ஹைனெஸ் நேபாள மகாராஜா அவர்களுக்கும் நமது நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்."

மார்ச்சு மாதம் 6-ம் தேதி அலிகார் சர்வ கலாசாலை மாணவர்களுக்கு மேன்மை தங்கிய சர் களாட் ஆக்கின்லெக் (பிரதம படைத் தலைவர்) ஒரு பிரசங்கம் செய்தார். அப்போது சென்ற 40 வருஷங்களாக, தனக்கு இந்தியப் போர்வீரர்களைப் பற்றிய அனுபவ முண்டென்றும் உலகத்திலேயே மகா சிறந்தவர்கள் இவர்கள் தான் என்றும் குறிப்பிட்டார். மேலும் அவர் கூறியதாவது :—

"சென்ற மாதம் இவர்களுடைய அருமையான போர்த் திறமையை அரக்கானில் காட்டினார்கள்."

அரக்கானிலுள்ள 14-வது தரைப் படைத் தலைவரான லெப்டினெண்ட் ஜெனரல் ஏ.எப்.பி. க்ரிஸ்ட்டிசென் கூறியதாவது :—

"முதன் முறையாக பிரிட்டிஷ் படைகளும் இந்தியப் படைகளும் சேர்ந்து ஜப்பானியர்களை வென்றனர். நெடுநாட்கள் மகா கடுமையாக இப்போர் நடந்து கொண்டிருந்தபோதிலும், அவர்களின் மகத்தான வீரமும்

(6-ம் பக்கம் பார்க்க)

இந்தியாவில் நடை பெற்ற விமானப் பயிற்சி சாலையில் தேரியவர்களுக்குப் பட்ட மளிப்பு விழா. சுமார் 100 சீன மாணவர்கள் இதில் தேறி பட்டம் பெறுகின்றனர். மூன்று மாதங்களுக்கொரு முறை இந்தப் பரீட்சை நடை பெறுகிறது. தேறியவர்கள் மேற் கொண்டு பயிற்சி பெற அமெரிக்காவுக்கு அனுப்பப்படுகிருர்கள்.

அக்கிரமச் சேமிப்பையும், அநியாய லாபத்தையும் தடுக்க அரசாங்கத்தார் மேற் கொண்டுள்ள முறைகள்

ஜனவரி மாதம் 22-ம் தேதி இந்தியா அரசாங்கக் கைத் தொழில் சிவில் சப்ளை இலாக்கா கீழ்க்கண்ட குறிப்பை வெளியிட்டிருக்கிறது :—

வெளி நாடுகளி லிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஒய்ின் முதலிய சாராய வகைகள் கையிருப்பில் இருப்பவற்றை பாதுகாக்க வேண்டும். இவை திருட்டு விற்பனைக் குள்ளாகாதபடியும் தடுக்க வேண்டும். திருட்டு விற்பனைக் குள்ளானுல், அவற்றின் விலை கட்டுக் கடுங்காமல் உயர்ந்து விடும். ஆகவே, அக்கிரமச் சேமிப்பையும் அநியாய லாபத்தையும் தடுக்கும் அவசரச் சட்டத்தின் 9-வது விதிப்படி, சிவில் சப்ளை கண்ட்ரோலர் ஜெனரல் ஒரு கட்டளை பிறப்பித்திருக்கிருர். இதன்படி, ஸ்பென்சர்ஸ், பிப் சன்ஸ், கட்லர் பாமர்ஸ், ஹெர்பெர்ட் சன்ஸ் முதலிய அதிகாரம் பெற்ற ஏஜெண்டுகள், தம்மிடம் பழமையாகவும் உண்மையாகவும் வாங்கிக் கொண்டிருப்பவர்களுக்கு மட்டும் சரக்கைப் பங்கிட்டுக் கொடுக்கத் தக்கபடி, பங்கீடு முறையைக் கையாள வேண்டும்.

மற்ற சில்லரை வியாபாரிகள் தம்மிடமுள்ள சரக்கை, வாரத்திற்கு இவ்வளவு என்று சம பாகமாக விற்பனைக்கு ஒதுக்கி வைத்துக் கொள்ள வேண்டும். தம்மிடம் நெடு நாட்களாகவும் ஒழுங்காகவும் வாங்கிக் கொண்டிருக்கிறவர்களுக்குள் இதைப் பங்கிட்டு விற்கவேண்டும். பிறகு இருக்கும் உபரிச் சரக்கை, மற்ற உண்மையான பேர்வழிகளுக்கு ஒரு சமயத்தில் ஒரு புட்டிக்கு அதிகப்படாமல் விற்கலாம்.

இந்தக் கட்டளையை நிறைவேற்றுவதில் வியாபாரிகளும் பொது மக்களும் ஒத்துழைப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நாட்டில் இப்போதுள்ள சரக்கின் நிலைமையைக் கொண்டு பரிசீலனை செய்கிறவர்களுக்கு, இப்படிப்பட்ட கட்டளை விதிப்பைத் தவிர வேறு வழி யில்லை யென்பது நன்கு விளங்கும்.

ஒய்ன்களுக்கும் சாராயங்களுக்கும் : விலைகள் நிர்ணயம்.

சென்ற ஜனவரி மாதம் 28-ம் தேதி இந்திய அரசாங்க கெஜெட்டில், கைத்தொழில்கள் சிவில் சப்ளைகள் இலாக்கா, அக்கிரமச் சேமிப்பையும் அநியாய விலையையும் தடுக்கும் அவசரச் சட்டப்படி ஒரு விளம்பரத்தை வெளியிட்டிருக்கின்றனர். அதன்படி ஒரு சாராய வகை வியாபாரியாவது உற்பத்தியாளராவது இன்ன விலைக்குத் தான் விற்க வேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது.

வெளி நாடுகளி லிருந்து இறக்குமதியாகும் சாராய வகைகளின் ஒரு குவார்ட்ஸ் புட்டியின் விலைகள் வருமாறு :—

ஜின் (சைப்ரஸ்) ரூ. 19-8-0 ; மற்றவை ரூ. 17-8-0 ; பிராந்தி (சைப்ரஸ்) ரூ. 19-8-0 ; மற்றவை ரூ. 18-8-0 ; ஒய்ன்கள் (சைப்ரஸ்) ரூ. 11 ; மற்றவை ரூ 10 ; வெர்மூத் (சைப்ரஸ்) ரூ. 11; மற்றவை ரூ. 9 ; அஸ்திரேலிய பியர்கள் ரூ. 2 ; தென் அமெரிக்க பியர்கள் ரூ. 3 ; அமெரிக்க பியர்கள் ரூ. 3-12-0.

இறக்குமதியாகும் விஸ்கி.

இங்கிலாந்தி லிறக்குமதியாகும் விஸ்கி இந்தியா முழுவதிலும் மொத்த விலை ஒரு குவார்ட்ஸ் புட்டிக்கு ரூ. 14-8-0 ; சில்லரையில் பம்பாய் மதுவிலக்குப் பகுதியில் மட்டும் ரூ. 19-8-0 ; இந்தியாவின் மற்றப் பகுதிகளில் சில்லரை விலை ரூ. 17-8-0.

இந்தியன் விஸ்கி, பிராந்தி, ரம், ஜின், மற்ற சாராய வகைகள் ஆகியவை பம்பாய் மாகாணத்தில் ஒரு குவார்ட்ஸ் புட்டிக்கு ரூ. 11 வீதமும், மற்ற மாகாணங்களில் உற்பத்தி செய்தால் ரூ. 13 வீதமும் விலைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. இந்திய திராட்சைக் கொடியைக் கொண்டு செய்யப்படும் பிராந்திக்கு ரூ. 14-8-0யும் இந்தியாவில் செய்த சுத்தமான மால்ட் விஸ்கி ரூ. 14-12-0யும் விற்க வேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது.

போட்டோ படங்கள் தயாரிக்கும் சாமான்களும், பைசிகில்களும், பூட் பாலிஷ்களும்.

ஜனவரி மாதம் 21-ம் தேதி கைத்தொழில் சிவில் சப்ளைகள் இலாக்காவில் கீழ்க்கண்ட குறிப்பை வெளியிட்டிருக்கிருர்கள்:—

அக்கிரமச் சேமிப்பையும் அநியாய லாபத்தையும் தடுக்கும் அவசரச் சட்டத்தின்படி, இந்திய அரசாங்க கெஜெட்டின் 1944-ம் வருஷம் ஜனவரி மாதம் 22-ம் தேதி வெளியீட்டில், ஒரு விளம்பரத்தை வெளி யிட்டிருக்கிருர்கள். அதன்படி, போட்டோ படங்கள் தயாரிப்பதற்கு உபயோகிக்கப்படும் சாமான்களை விற்பவர்களை, தம் கடையில், முக்கியமான இடத்தில் தம் சரக்குகளின் விலையை எழுதி ஒட்டி வைக்க வேண்டும். அந்தச் சாமான்களை வாங்க வருகிறவர்கள் தாமாகவே அந்த ஜாபிதாவைக் கண்டு சரியான விலையைத் தெரிந்து திருப்தி கொள்ளத் தக்கபடி இருக்க வேண்டும்.

(8-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்கம் தொடர்ச்சி.)

கடமையை நிறைவேற்ற வேண்டுமென்னும் பொறுப்புணர்ச்சியும் பற்றி நான் பெரிதும் பெருமித மடைகிறேன்.

கிழக்கு விமானப்படையின் அருஞ் செயல்கள்.

அரக்கானில் சமீபத்தில் கிடைத்த வெற்றிக்குப் பெரும்பாலும் கிழக்கு விமானப் படைதான் காரணம் என்று சொல்லலாம். தென்கிழக்காசியப் போர் முனையிலுள்ள எல்லா பிரிட்டிஷ் விமானப் படைகளும் அமெரிக்க விமானப் படைகளும் ஒரே படையாக, தென் கிழக்காசிய விமானப் படையாக ஏர் சீப் மார்ஷல் சர் ரிச்சர்ட் பியர்ஸ் தலைமையில் திரண்டது. கெய்ரோ மகா நாட்டில், கடல் மூலமாகவும் விமான மூலமாகவும் ஜப்பானியர்கள் நசுக்கப்பட வேண்டுமென்று முடிவு செய்ததின் பயனுகத் தான், இந்த இரண்டு விமானப் படைகளும் ஒன்றுபட்டு ஒரு தலைவருக்குட்பட்டன. இந்த படைத் தலைமை ஏற்பட்டவுடனே, இதன் முக்கியத்தைக் குறித்து சர் ரிச்சர்ட் பியர்ஸ் அனுப்பியுள்ள தோர் செய்தியில் கீழ்க் கண்டவாறு தெரிவிக்கிறார் :—

"கிழக்கு விமானப் படை என்று ஒரு படை ஏற்படுத்தப்பட்டதை நான் முழு மனத்தோடு வரவேற்கிறேன். ஏனென்றால், ஏற்கெனவே, பிரிட்டிஷ் விமானப் படைகளுக்கும் அமெரிக்க விமானப் படைகளுக்கும் உள்ள தொடர்பு மேலும் பலப்படுகிறது. அன்றியும், ஆகாயத்திலும், விமானங்களி லிருந்தும் எதிரியை நாசஞ் செய்வதற்கு ஏற்றதோர் வகையைக் கண்டுபிடிக்க வேண்டு மென்று, அமெரிக்காவும் பிரிட்டனும் உறுதிகொண்டிருக்கின்றன வென்று, அதில் சம்பந்தமுடைய அனைவருக்கும் தெளிவாகத் தெரிகிறது."

வங்காளப் பகுதியிலுள்ள 10-வது அமெரிக்க விமானப் படை, பிரிட்டிஷ் விமானப் படை, இவ்விரண்டிலுமுள்ள போராடும் படைகளெல்லாம் ஒன்றுபட்டுத்தான் கிழக்கு விமானப் படை என்னும் பெயர் பெற்றிருக்கின்றன. இதன் தலைவர் மேஜர் ஜெனரல் ஸ்ட்ரேட்பியர். இந்தப் படைதான் அரக்கானில் சிறந்த வெற்றி பெற்றது. மத்தியதரைக் கடற் போரில் ஆப்பிரிக்க விமானப் படை எந்த முறையில் அமைக்கப்பட்டதோ, அதே முறையில் தான் இந்த ஆகாய விமானப் படையும் அமைக்கப்பட்டது. இந்தப் படையை இரு பிரிவுகளாகப் பிரித்து, ஒன்றிற்கு பிரிட்டிஷ் விமானப் படையைச் சேர்ந்த ஏர் மார்ஷல் சர் ஜான் பால்ட்வினும், மற்றொன்றிற்கு 10-வது அமெரிக்க விமானப் படையைச் சேர்ந்த பிரிகேடியர் ஜெனரல் ஹொவார்ட் சி டேவிட்சனும் நியமிக்கப்பட்டார்கள். ஏர் மார்ஷல் சர் ஜான் பால்ட்வின் தலைமைக் குட்பட்ட படைகளுக்கு ஏற்பட்ட கடமைகளாவன :—

1. போர் முனையிலுள்ள தரைப் படைகளுக்கு நேர்முகமான உதவியளித்தல்.

(a) நெடுந்தூரம் சென்று வேவு பார்த்தல்,

(b) உள் நாட்டில் விமான பல உயர்வை நிலை நாட்டுதல்.

2. எதிரி உதவிப் படைகள் போர் முனைக்கு வந்து சேராதபடி தடுத்தல்.

3. வெகுதூரம் பறந்து செல்லும் வெடிகுண்டு விமானப் படைகளுக்குப் பாதுகாப்பளித்தல், பிரிகேடியர் ஜெனரல் ஹோவர்ட் சி டேவிட்சன் தலைமைக் குட்பட்ட படையின் கடமையாவது :—

எதிரியின் படைகளை நேர்முகமாகத் தாக்குவது.

முற்கூறிய வகையில் விமானப் படைகள் மேம்பாடடைந்திருந்தா லல்லது போர்முனையில் வெற்றி கிடைப்பது அரிது என்று மத்தியதரைக் கடற் போர் முனையில் தெளிவாகத் தெரிந்தது.

அரக்கானில் விமான உதவி: தரைப்படைகளுக்குக் குடைபோல் அமைந்தது.

அதே முறை தான், அரக்கானிலும் வெற்றி தந்தது. சாதாரணமாக யுத்த ஆரம்பத்தில் ஜப்பானியர்கள் பெரும் விமானப் படைகளை உதவியாகக் கொண்டு வந்து தாக்குகிறார்கள். இந்த ஜம்பம் இப்போது பலிக்க வில்லை. ஏனென்றால், நேசநாட்டுத் தரைப் படைகளுக்கு மேலே குடை பிடித்தது போல விமானப் படைகள் ஏராளமாகப் பாதுகாத்துக் கொண்டிருந்தன. இதுவரை இவ்வளவு பெரிய விமானப்படை, குடையாக அமைந்ததே கிடையாது. எதிரி விமானப் படையை ஒழிப்பதற்கு, நம்முடைய மேலான விமான பலந்தான் காரணம் என்று தெளிவாகத் தெரிகிறது. நமது விமானங்கள் பிப்ரவரி மாதம் 4-ம் தேதி முதல் 19-ம் தேதிக்குள்ளாக மட்டும் 3,000 முறை ரோந்து வந்தன. இந்திய விமானப் படையைச் சேர்ந்ததோர் பகுதிப்படை மட்டும் 7 நாட்களில் 100 முறைகள் ரோந்து சுற்றி வந்தது. மகா கடுமையான நாட்டில் இந்திய விமானிகள் 200 முறை ரோந்து சுற்றிவந்தனர். இவை பற்றி நாம் உண்மையிலேயே பெருமை யடைகிறோம்.

நிற்க, எல்லா தரைப் படைகள் வழியாகவும் போர்முனைகளுக்கு சப்ளைகள் போய்ச் சேருவதற்கு பந்தோபஸ்து அளிக்கின்றன. போர்முனைகளில் வேண்டிய பெட்ரோல், எண்ணெய், வெடி மருந்துகள், உணவு, துணி, மருந்து வகைகள் முதலியவற்றையும் கொண்டு போய்ச் சேர்க்கின்றன. மேலும் போர் முனைகளில் காயப்பட்டவர்களையும் அங்கிருந்து விமான மூலம் அப்புறப்படுத்தினார்கள்.

சமீபத்தில் லார்ட் லூயி மௌண்ட்பேட்டன் அரக்கானுக்கு விஜயம் செய்த போது, கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார் :—"ஜெர்மனியை தோற்கடித்த பிறகு, ஏராளமான மூலப் பொருட்கள் கிடைக்கும். அவற்றை எப்படிக் குறைக்கிறது என்பதே பெரும் பிரச்னையாகி விடும். ஜப்பானோடு போராடுவதற்கு இவையனைத்தும் உபயோகிக்கப்படும். இப்போது நேச நாடுகளுக்குள்ள மூலப் பொருட்களை மட்டுந்தான் கொண்டு ஜப்பானுடன் போராடுகிறோம். இது அவர்களுக்கு அதிகக் கலக்கத்தை யுண்டாக்குகிறது.

அரக்கான் வெற்றிக்கு மற்றொரு காரணமுண்டு. கடற்கரையில் ரோந்து போய்க் கொண்டிருக்கும் இந்தியக் கப்பற் படையினர், ஜப்பானியர் ஹாப் ஆற்றைக் கடந்து இந்தியாவில் காலடி எடுத்துவைக்க ஒட்டாமலும், மால்டாவுக்கு அருகில் எதிரிப் படைகள் சேர ஒட்டாதபடி, அவ்வப்போது மாங்டாவைத் தாக்கிக் கொண்டு மிருந்தன.

ஜப்பானிய படைத்தலைவரான கர்னல் டனபாஷியை வெல்லும் முயற்சியில், 14-வது படையினர் எவ்வளவு பிடிவாதமும் வீரமும் கொண்டிருந்தார்களென்று முன்னமே குறிப்பிடப் பட்டிருக்கிறது. மேலும், சென்னைப் பயனீயர் படையினர் தம் இராணுவப் பரம்பரையின் புகழைப் பெருக்கத்தக்க பல அரும் செயல்கள் புரிந்திருக்கின்றனர். சாதாரணமாக ரோடுகள் போடுவதும் விமான தளங்கள் கட்டுவதுந் தான் அவர்கள் வேலை. ஆனல், செங்குத்தான பாறைகளில் ஏறினார்கள். ஆறுகளைக் கடந்தார்கள். கஷ்ட நிலைமையிலிருக்கும் படையினருக்கு சப்ளைகள் கொண்டு போய்ச் சேர்த்தார்கள். ஒவ்வொருவரும் 40 பவுண்ட்கனமுள்ள சப்ளைப் பொருட்களைச் சுமந்து கொண்டு போனார்கள்.

இந்தக் காரணங்களால் அரக்கானில் நமக்கு வெற்றி கிடைத்தது. என்றாலும், ஜப்பானியர் வசமுள்ள நாடுகள் மீது நாம் படையெடுத்துச் சென்று அடைந்த வெற்றிகள் என்று சொல்லுவதற்கில்லை. ஆனல், மகா உறுதியோடு ஜப்பானியர்கள் நம்மீது படையெடுத்து வந்ததைத் தகர்த்து விட்டோம். ஜப்பானியர்களுடைய நோக்கம் ஈடேறியிருக்குமானல், இந்தியாவின் பாதுகாப்பு பெரும் ஆபத்துக்குள்ளாக நேரும். அன்றியும் ஜப்பானியர் மீது பெருவாரியாகப் போர் தொடுக்க நாம் போட்டிருக்கும் திட்டமும் முறிந்து போகும். ஆகவே தான் இந்த வெற்றி மகா முக்கியமான தென்று சொல்லுகிறோம்.

வானொலி நாட் குறிப்பு.

சென்னை.—மார்ச்சு 14 இரவு 9-45 மணிக்கு காப்டன் ஜி. டி. பி. ஹார்வி அவர்கள் "வெற்றி பெற முழு முயற்சி—கடுமையாக உழையுங்கள்" என்பது பற்றிப் பேசுவார்.

சேவாதாரணித் திட்டத்தின் சிறப்பு

படையினரின் குடும்பங்களுக்கு உதவி

பெண்களுக்குப் பயிற்சி

டாக்டர் டி. எஸ். இராஜலட்சுமி, எம்.ஏ., பி.எச்.டி.

டாக்டர் டி. எஸ். இராஜலட்சுமி, எம்.ஏ., பி.எச்.டி., ஜில்லா இன்ஸ்பெக்டரஸ், சேவாதாரணித் திட்டம், சென்னை.

நம் படை வீரர்களின் குடும்பத்தினர்களின் க்ஷேமத்தைக் கோரி, ராணுவ இலாகா அதிகாரிக்கும், கவர்மெண்டும், என்னென்ன ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள்? இதைச் சற்று கவனிப்போம். படை வீரர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்சளின் க்ஷேமத்தை, நன்கு கவனிக்கும் பொருட்டும், நம் சென்னை ராஜதானியில், சுமார் 25 ஜில்லாக்களில் சபைகள் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். அது தவிர, சமீபத்தில் ஜனவரி மாத ஆரம்பத்தில், ஸேவாதாரிணி என்ற திட்டம் ஒன்று புதிதாக அமைக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தை சிறப்பாக நடத்த, பெண்களையே உத்தியோகஸ்தர்களாக, இதில் நியமித்திருக்கிறார்கள். இவர்கள் இத்திட்டத்தின் முக்கிய கோரிக்கையின்படி, பட்டாளத்தில் சேவை செய்யும் நம் படை வீரர்களின் குடும்பத்தைச் சேர்ந்த பெண்களுக்கு, ஏற்படக்கூடிய கஷ்டங்களை தாங்களே நேராக விசாரித்து, அவர்களுக்குத் தேவையான ஒத்தாசைகளைச் செய்து வருகிறார்கள். இது இச்சேவாதாரணி திட்டத்தின் வேலைகளில் ஒன்றாகும். படை வீரர்களின் பிள்ளைகளோ, பெண்களோ, அல்லது வேறு எவரேனும் பள்ளிக்கூடங்களில் படித்துக் கொண்டிருந்தால், அவர்களுக்கு இலவசப் படிப்புச் சொல்லிக் கொடுத்தல், புத்தகங்கள் வாங்க பண உதவி செய்தல், இது போன்ற வேலைகளும் இச்சேவாதாரிணிகள் செய்யக் கடமைப் பட்டுள்ளார்கள். மேலும், இக்குடும்பங்களுக்கு வேண்டிய வைத்திய உதவிகள் இலவசமாகக் கொடுக்கப்பட்டு, ஒருக்கால் அவர்களில் யாராவது ஆஸ்பத்திரிகளில் இருக்க நேரிட்டால், அவர்களை மிக்க சிரத்தையுடன் கவனிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

போர்க்களத்தில் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் நம் படை வீரர்கள் தம் குடும்பங்களுக்கு அனுப்பும் தகவல்கள் சரியாக அவரவர்களுக்குச் சேரும்படியும், இக்குடும்பங்கள் அனுப்பும் பதில்களும் தடையில்லாமல் அவர்களிடம் சேருவதற்கும் இத்திட்டம் உதவி புரியும்.

படையினர் குடும்பங்களுக்கு உதவி

சில சமயங்களில் சிப்பாய்மார்கள், தம் குடும்பத்திற்கு மாதா மாதம் வேண்டிய பணம் அனுப்ப வேண்டிய ஏற்பாடுகள் செய்யாமலிருந்தால், அந்தந்த பட்டாளங்களில் அதிகாரிகளிடம் தெரிவித்து கிரமப்படிப் பணம் அனுப்ப, இத்திட்டத்தார் உதவுகிறார்கள். நம் நாட்டிலோ பட்டணங்களில் இருக்கும் சிப்பாய்கள் ஏதாவது விசேஷ சம்பவத்தால் தம் குடும்பத்தின் அருகிலேயே இருக்கவேண்டிய அவசியம் ஏற்படின், அவர்களைக் கூடியமட்டும் அக்குடும்பத்திற்கு அருகாமையிலிருக்கும் பட்டாளத்திற்கு டிரான்ஸ்பர் செய்ய அதிகாரிகளிடம் சிபார்சு செய்ய முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படும். ராணுவத்தில் வேலை செய்பவர்களின் குடும்பத்தில், சில சமயங்களில் சச்சரவுகள் ஏற்படலாம். இவ்விதம் ஏற்படும் சச்சரவுகளைக் கூடியமட்டில் கோர்ட்டுக்குச் சென்று வழக்காடாமலும், பணச் செலவில்லாமலும் சமாதானமாகவும் சௌகரியமாகவும் முடித்து வைப்பதற்கும் தேவையான ஏற்பாடுகள் செய்வார்கள். சண்டை நடக்கையில் நம் வீரர்களில் சிலர் எதிரிகளின் கையில் அகப்பட்டுக்கொண்டு, யுத்தக் கைதிகளாக இருக்கிறார்கள். அப்படி எதிரிகளிடம் கைதிகளாக இருக்கும் தம் வீரர்களுக்கு அவரவர்களுடைய குடும்பத்தின் க்ஷேமத்தைப் பற்றிய கடிதங்கள் எழுதியனுப்பவும், பண்டம், உடுப்புகள், முதலியவைகள் அனுப்பி வைக்கவும் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. மேலும், அக்குடும்பங்களின் சுகவாழ்விற்குத் தேவையான உணவுப் பொருள்கள் வாங்குவதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

தவிர, யுத்த விஷயத்தை அப்போதைக்கப்போது அக்குடும்பத்தினருக்குத் தெளிவான முறையில் சொல்வதுமல்லாமல் யுத்த நிகழ்ச்சிகள் எங்கெங்கு நடக்கின்றன, எங்கெங்கு நம் நேச தேசப் படைகள் வெற்றியடைகின்றன என்பவைகளையும் அவர்களின் கடமையென்ன, எப்படி இறுதி வெற்றிக்கு ஒத்துழைக்க வேண்டும் என்றும் பல விஷயங்களும் சொல்லப்படும்.

பண முடையில் உதவி

நிற்க, படை வீரர்களுக்குச் சில சமயங்களில் பணமுடக்கு ஏற்பட்டு, செலவிற்குப் பணம் தேவையா யிருந்தால், அதை விசாரித்து அவர்கள் பணம் பெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளும் இத்திட்டத்தார் செய்வார்கள்.

அது அப்படியிருக்க, ராணுவத்தார்களின் குடும்பங்கள் கையிலிருக்கும் பணத்தை எவ்வாறு சேமிக்கலாம் என்பதைப்பற்றி யோசிக்க வேண்டும். கையில் நிறையப் பணம் இருக்கிறது என்று சொல்லி அனாவசியமான பொருள்களை வாங்கிப் பணத்தை வீணாக்கக் கூடாது. அதிக வட்டி வரும் என்று பேராசையுடன் கண்டவர்களிடம் பணத்தைக் கடன் கொடுத்துவிட்டு, பிறகு அந்தப் பணத்தைப் திருப்பி வாங்க முடியாமல் திண்டாடக் கூடாது. தற்காலத்தில் நாம் சேமிக்கக் கூடிய பணத்தைப் பத்திரமாகவும், லாபகரமாகவும் வைக்க நாஷனல் ஸேவிங் ஸர்டிபிக்கேட் என்னும் உயர்ந்த முறை ஏற்பட்டிருக்கிறது. இந்த ஸர்டிபிக்கேட்டுகளை வாங்கினால், சில வருஷங்களுக்குப் பிறகு, நமக்கு வேண்டிய போது, வட்டியுடன் பணம் தயாராய் இருக்கும். அதுவுமல்லாமல் சமீபத்தில், சர்க்காரினால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஒரு புதிய முறையினால், இந்தப் பத்திரங்களை வாங்குபவர்களுக்குப் பெரிய பெரிய பரிசுகளும் கிடைக்க இடம் இருக்கிறது. இது ஒரு லாட்டரி இல்லை. ஏனெனில், ஏதாவது லாட்டரிக்கு டிக்கட்டு வாங்கினால், நமக்கு அந்தப் பரிசு வராவிட்டால், நாம் போட்ட பணம் வீணே போகும். சர்க்காரால் ஏற்படுத்தப்பட்ட இந்த புதிய முறையோ அப்படியல்ல. நாம் ஒரு பத்திரம் வாங்கினால், அதிர்ஷ்டமிருந்தால் நமக்குப் பெரிய பரிசும் கிடைக்கலாம். இல்லாவிட்டால், நாம் போட்ட பணமாவது நமக்குக் கட்டாயம் திரும்பி வந்து விடும். இப்பேர்ப்பட்ட பணம் சேமிக்கும் முறைகளை ராணுவத்தார் குடும்பங்களுக்கு விவரமாகச் சொல்வதும், இசசங்கத்தாரின் நோக்கமாகும்.

முதல் சிகிச்சைப் பயிற்சி

ராணுவக் குடும்பத்தைச் சேர்ந்த ஸ்திரீகளுக்கென பிரத்தியேகமான ஒரு வகுப்பில் எப்படி முதல் சிகிச்சை செய்ய வேண்டும் என்பதைப் பற்றிக் கற்பிக்கப்படும். இதற்காக யாதொரு கட்டணமும் வாங்கப்படுவதில்லை. இந்த யுத்த காலத்தில் அநேக டாக்டர்கள் யுத்தத்தில்

(9-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கம் தொடர்ச்சி)

அக்கிரமச் சேமிப்பையும் அநியாய லாபத்தையும் தடுக்கும் அவசரச் சட்டப்படி, 1944-ம் வருஷம் ஜனவரி மாதம் 22-ம் தேதி யிட்ட இந்தியா கெஜெட்டில் வெளியாகி யிருக்கும் விளம்பரப்படி, பம்பாயிலும் கல்கத்தாவிலும், பி.எஸ்.ஏ., ரலே அல்லது ரட்ஜ்-விட்-ஒர்த் பைசிகில்கள் ரூ. 140 வீதமும் டேடன் நார்மன், ஹெர்க்யூலிஸ், பிலிப்ஸ், க்ரோமெக்ஸ் அல்லது போனிக்ஸ் பைசிகில்கள் ரூ. 135 வீதமும் விற்க வேண்டும்.

இந்தியாவின் மற்ற பகுதிகளில், சில்லரையில், ஒரு பைசிகிலின் அடக்க விலைக்குமேல் ரூ. 10-க்கு அதிகப்படாத லாபத்தை வைத்து விற்கலாம். சைகிலைச் சேர்ந்த மணி, விளக்குகள், சங்கிலிகள், காற்றடிக்கும் பம்புகள், மற்றப் பகுதிகள் முதலியவற்றின் விலைகளும் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன.

சில்லரை வியாபாரிகள் பைசிகில்களையும், அவற்றைச் சேர்ந்த பகுதிகளையும் மிகவும் அதிக விலை கொடுத்துக் கொள் முதல் செய்திருக்கிறார்கள் என்பதையொட்டியே, இவற்றின் விலைகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. இனி ஏற்படக்கூடிய நிலைமையை அனுசரித்து இவற்றின் விலைகளை மாற்றி யமைக்கும்படியும் நேரலாம்.

அக்கிரமச் சேமிப்பையும் அநியாய விலையையும் தடுக்கும் அவசரச் சட்டத்தின்படி 1944-ம் வருஷம் ஜனவரி மாதம் 22-ம் தேதி வெளியான விளம்பரம், கீழ்க்கண்ட வகை 'பூட் பாலிஷ்'களின் விலையை நிர்ணயிக்கிறது.

		ரூ.	அ.	பை.
"கிவி"	.. ..	0	10	0
"நல்ல பாம்பு"	பெரிது.	0	8	0
ஷெ	சிறிது.	0	4	0
"சொரிப்ரைசம்"	..	0	8	0
"கிளி"	.. ..	0	4	0

ஜனவரி மாதம் 28-ம் தேதி அக்கிரமச் சேமிப்பும் அநியாய விலையையும் தடுக்கும் சட்டப்படி கைத்தொழில் சிவில் சப்ளை இலாக்கா இந்தியா கெஜெட்டில் வெளியிட்ட விளம்பரத்தின்படி துப்பாக்கி வெடி மருந்து வியாபாரிகளும் உற்பத்தியாளரும் இன்ன விலைக்கு அதிகமாக விற்கக் கூடாதென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

தம்மிடம் சரக்குகள் கொள் முதல் செய்யும் சில்லரை வியாபாரிகளுக்கு, 100-க்கு 20 விகிதம் இலாபம் கிடைக்கத் தக்கபடி விலை விதித்து, மொத்த வியாபாரிகள் விற்க வேண்டு மென்று அந்த விளம்பரம் கூறுகிறது. அன்றியும் தம் கடையின் முக்கியமான இடத்தில் சில்லரை விலைப் பட்டியலை அரசாங்கத்தார் விதித்துள்ள விலைகளின்படி தொகுத்து எழுதி ஒட்ட வேண்டு மென்றும் கூறுகிறது.

க்ஷவர 'ப்லேட்கள்', பௌண்டன் பேனுக்கள், விளையாடும் சீட்டுக்கட்டுகள், டென்னிஸ் பந்துகள்.

அக்கிரமச் சேமிப்பையும் அநியாய விலைகளையும் தடுக்கும் அவசரச் சட்டத்தின்படி இந்திய கெஜெட்டில், கைத்தொழில் சிவில் சப்ளை இலாக்கா ஜனவரி மாதம் 29-ம் தேதி வெளியிட்டிருக்கும் விளம்பரத்தில், பொது ஜனங்கள் வெகுவாக உபயோகிக்கும் க்ஷவர ப்லேட்கள், சிகரெட்டுகள், பௌண்டன் பேனுக்கள், விளையாடும் சீட்டுக் கட்டுகள், டென்னிஸ், கால்ப், பிங்பாங் ஆட்டப்பந்துகள் முதலியவற்றை விற்கிறவர்களும் உற்பத்தி செய்கிறவர்களும் சில்லரையில் இன்ன விலைக்கு அதிகமாக விற்கக் கூடாது என்று விளம்பரப்படுத்தி யிருக்கிறார்கள்.

	ரூ.	அ.	பை.
10 கொண்ட ப்ளூ கில்லெட் க்ஷவர ப்லேட்	1	12	0
10 கொண்ட ஸ்டெய்ன்லெஸ் கில்லெட் க்ஷவர ப்லேட் ..	2	8	0
12 கொண்ட கில்லெட் யூடிலிடி க்ஷவர ப்லேட் ..	1	4	0
10 கொண்ட 7 ஒக்ளாக் க்ஷவர ப்லேட்	0	12	0
10 கொண்ட நேசெட் க்ஷவர ப்லேட்	0	12	0
10 கொண்ட வாலெட் க்ஷவர ப்லேட்	1	14	0
5 கொண்ட சஹாரா (மட்டம்) க்ஷவர ப்லேட்	0	6	0
5 கொண்ட சஹாரா (உயர்ந்தது) க்ஷவர ப்லேட் ..	0	8	0

டி. மக்ரபோல் கம்பெனியார் தயாரிக்கும் 50 சிகிரெட்டுகள் கொண்ட 1 டப்பி, 12 அணு முதல் ரூ. 2 வரை விலை விதிக்கப்பட்டிருக்கிறது. புகழ் வாய்ந்த மற்ற சிகிரெட்டுகளின் விலையும் ரூ. 1-10-0 முதல் ரூ. 1-14-0 வரை விதிக்கப்பட்டிருக்கிறது.

பௌண்டன் பேனுக்கள் கீழ்க்கண்ட விகிதத்திற்கு அதிகப்படாத விலைக்கு சில்லரையில் விற்கப்பட வேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது.

பார்க்கெட் பேனு—ரூ. 18 முதல் ரூ. 150 வரை.

ஷியபர்ஸ்—ரூ. 20 முதல் ரூ. 70 வரை.

வாட்டர்மன்—ரூ. 15 முதல் ரூ. 35 வரை.

கான்வே ஸ்டுவர்ட்—ரூ. 10 முதல் ரூ. 20 வரை.

எவெர் ஷார்ப்—ரூ. 60 முதல் ரூ. 72 வரை.

ஸ்வான் (செல்ப் பில்லர் நெ. 200) ரூ. 10.

ப்ளாக் பர்ட்—ரூ. 7.

மற்ற தங்க நிப் போட்ட அமெரிக்க பேனு—ரூ. 2-15-0 முதல் ரூ. 6-11-0 வரை.

மற்ற இங்கிலீஷ் பேனு—ரூ. 6 முதல் ரூ. 12 வரை.

நிற்க, அமெரிக்க விளையாடும் சீட்டுக் கட்டு (கார்வான்) அணு 12, தகர டப்பியில் டென்னிஸ் பந்துகள் ரூ 50, இங்கிலீஷ் புட்பால் ப்ளாடர்கள் ரூ. 30, கால் பந்துகள் ரூ. 42, பிங்பாங் பந்துகள் ரூ. 20, ஸ்குவரான் பந்துகள் ரூ. 60.

ஏற்றுமதிகள்

விற்பனையின் பேரில் ஏற்றுமதி செய்யப்படும் பொருட்கள், இந்த அக்கிரமச் சேமிப்பையும் அநியாய விலையையும் தடுக்கும் அவசரச் சட்டத்திற்கு உள்ளாகாதென்று 1944-ம் வருஷம் ஜனவரி மாதம் 29-ம் தேதி இந்தியா கெஜட்டில் வெளியிடப்பட்ட விளம்பரம் கூறுகிறது.

சர்க்கரையும் வெல்லமும்

அக்கிரமச் சேமிப்பையும் அநியாய லாபத்தையும் தடுக்கும் அவசரச் சட்டப்படி, ஒரு சமயத்தில் 3 மாதத் தேவைக்கு அதிகப்படாத அளவிற்கு மட்டுந் தான் பொருள்களை உபயோகிப்பவர்கள் இருப்பு வைத்துக் கொள்ளலா மென்று 1943-ம் வருஷம் டிசம்பர் மாதம் 4-ம் தேதி இந்தியா கெஜெட்டில் வெளியிடப்பட்ட அறிக்கையில் உள்ளிட்ட 23 வகை உணவுப் பொருட்களும் உணவு தானியங்களும் சேர்த்துக் கொள்ளப் பட்டிருக்கின்றன.

இந்த விளம்பரப்படி இந்த அவசரச் சட்டத்திற்கு சர்க்கரையும் வெல்லமும் உட்பட்டவையா என்னும் சந்தேகம் உண்டானபடியால், உட்பட்டவை தான் என்று தெளிவுபடுத்திக் கூற வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

மோட்டார் ஸ்பிரிட் விலைகள்

1944-ம் வருஷம் ஜனவரி மாதம் 22-ம் தேதியிலிருந்து மெய்ன் போர்ட் பம்பில் இப்போது ரூ. 1-14-0-க்கு ஒரு காலன் விற்கப்படும் மோட்டார் ஸ்பிரிட் ரூ. 2 வீதம் விற்கப்பட வேண்டு மென்று இந்தியா அரசாங்கம் விலையை உயர்த்தி யிருப்பதாக அறிவிக்கிறது. இந்தியா முழுவதிலும் உயர்தரமான ஒரே மாதிரி மோட்டார் ஸ்பிரிட் விற்கப்பட வேண்டு மென்று செய்யப்பட்டிருக்கும் முடிவை யொட்டித்தான், இந்த விலையை உயர்த்த வேண்டி வந்தது.

மெய்ன் போர்ட்களில் உயர்தர மண்ணெண்ணெய் விலையும் கீழ்த்தர மண்ணெண்ணெய் விலையும் மாறவில்லை.

செஞ்சிலுவை ஒலி பெருக்கிப் பிரசங்கம்.

சென்னை.—அகில இந்திய வானொலி நிலையத்திலிருந்து மார்ச்சு மாதம் 14-ம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 7-45 மணிக்கு செஞ்சிலுவைப் பிரசார பிரசங்கம் ஒலிபரப்பப்படும்.



ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்களை மூழ்கடித்துத் திரும்பிய கப்பல்கள்: எச். எம். ஐ: எஸ். கோதாவரி முதலிய நான்கு கப்பல்கள் எதிரி நீர் மூழ்கிக் கப்பல்களை வட அட்லாண்டிக் கடலில் வேட்டையாடித் திரும்பின.

அக்கிரமச் சேமிப்பையும் அநியாய லாபத்தையும் நிறுத்துங்கள்

வியாபாரி அதிக விலை சொன்னால்?

அக்கிரமச் சேமிப்பையும் அநியாய விலையையும் தடுக்கும் அவசரச் சட்டத்தின் 3-வது விதிப்படி நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அதிகமாகவோ, ஒரு பொருளின் உற்பத்தி விலையில் 20 சத விகித இலாபத்திற்கு மேல் அதிக லாபத்தைத் தரும் விலைக்கோ, அந்தப் பொருளை விற்கிற வியாபாரி, குற்றவாளி யாகிறார்.

கீழ்க் கண்ட பொருள்களின் உச்ச விலையை அரசாங்கத்தார் நிர்ணயித்திருக்கின்றனர் :—

பதனிட்ட தோல், பலவகை சிகிரெட்டுகள், படங்கள் எடுத்து முடிப்பதற்குப் பயன்படும் பொருட்கள், இராசயனப் பொருட்கள், சைகிள்கள்: பி.எஸ்.ஏ., ரலே, ரட்ஜ் விட் ஒர்த், டேடன், நார்மன், ஹெர்க்யூலிஸ், பிலிப்ஸ், க்ரோமெக்ஸ் அல்லது போனீக்ஸ்.

சைகிள் பகுதிகள் :—

லூகாஸ் பெல், லூகாஸ் விளக்கு, ப்ரீ வீல், சங்கிலி, ஹப்ஸ், சக்கரத்திலுள்ள கம்பிகள் (ஸ்போக்ஸ்).

துப்பாக்கி, வெடி மருந்துகள், பௌண்டென் பேனாக்கள், விளையாடும் சீட்டுக்கட்டுகள் (அமெரிக்கன், கரவன்), குழந்தைகளுக்கு பெடல் கார்டு (இங்கிலீஷ்), வழுக்கி யோடும் உருளைகள், அமெரிக்க எ.ஃ.கு எக்ஸ்பாண்டர்கள், இங்கிலீஷ் : மெக்கானோ செட்டுகள், ஹார்ன்பி ரயில் வண்டிகள், இங்கிலீஷ் புட்பால் ப்ளாடர்கள், இங்கிலீஷ் டென்னிஸ், பிங்பாங், ஸ்குவாஷ் பந்துகள், க்ஷவர ப்ளேட்கள்.

கில்லெட், 7 ஒக்ளாக், நேஸெட், வாலெட், நேஸெட்-வாலெட், எவர் ரெடி, எக்லிப்ஸ், வார்டோனியா, சஹாரா.

கம்பளித் துணிகள் (பின்னியவையும் நெய்தவையும்).

கீழ்க் கண்ட பொருட்களின் விலையை நிர்ணயித்துக் குறிக்கும்படி அரசாங்கத்தார் கட்டளை யிட்டிருக்கிறார்கள் :—

கம்பளித் துணிகள், கை கெடியாரங்கள், பெரிய கெடியாரங்கள், டைம் பீஸ்கள், வெளி நாடுகளி லிருந்து இறக்குமதியான புத்தகங்கள், சஞ்சிகைகள் முதலியன.

கீழ்க்கண்ட பொருட்களின் விலைப் பட்டியலை அனைவரும் காணத் தக்கபடி அமைக்க வேண்டு மென்று அரசாங்கத்தார் கட்டளை யிடுகின்றனர் :—

கைக் கெடியாரங்கள், பெரிய கெடியாரங்கள், டைம்பீஸ்கள், கம்பளித் துணிகள், சிகிரெட்டுகள், பட மெடுப்பதற்குப் பயன் படும் பொருட்கள், துப்பாக்கிகள், வெடி மருந்துகள், சாராய வகைகள், சைகிள்கள், சைகிள் பகுதிகள்.

இந்த விதிகளுக்கு மாறாக யாராவது நடந்தால், வெளியூர்களில் வியாபார வரி உத்தியோகஸ்தரிடமும், சென்னையில், சிவில் சப்ளைஸ் கமிஷனரிடமும் தெரிவிக்கவும்.

ஞாபகப் படுத்திக் கொள்ள வேண்டியது.—பொருள்களை வாங்குகிற ஒவ்வொருவரும் ஒவ்வொரு இன்ஸ்பெக்டரைப் போல நடந்து கொண்டால் தான் இந்த அவசரச் சட்டம் நன்கு அமுல் நடத்தப் பட்டதாகும்.

(7-ம் பக்கம் தொடர்ச்சி)

சேவை செய்யவேண்டி படையில் சேர்ந்திருப்பதாலும், மருந்துகளின் விலைகளெல்லாம் அதிகமாயிருப்பதாலும், பெண்கள் நேரடியாக ராணுவத்திற்கு உதவ முடியா விட்டாலும், அவரவர்கள் குடும்பத்தினர்களுக்கும், நண்பர்களுக்கும், முதற் சிகிச்சை செய்து தங்களால் இயன்றவரை உதவி செய்யலாம்.

அநேகப் பெண்கள் பொய் வதந்திகளை நம்பி, சென்ற வருஷம் ஊர் விட்டு ஊர் போய், பல இன்னல்களை அனுபவித்தார்களென்பது நான் சொல்லாமலே உங்களுக்கெல்லாம் தெரியும். எனினும் நான் முக்கியமாக ராணுவக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்களை இப்பேர்பட்ட பொய் வதந்திகளுக்கு இனி மேலாவது இடங் கொடுக்காமலிருக்கும்படி கேட்டு கொள்கிறேன். அதுவுமன்றி, இப்படிப்பட்ட பொய் வதந்திகளை, நம் படை வீரர்களுக்குக் கடிதம் மூலமாக எழுதி, அவர்களுக்கு வீண் கவலை உண்டாக்கக் கூடாது.

கடைசியாக, ராணுவ வீரர்களின் குடும்பத்தை சேர்ந்தவர்களுக்கு என்னென்ன நன்மைகள் வேண்டுமோ, அவைகளை சென்னை ஜில்லா ராணுவ வீரர்களின் க்ஷேம சபையின் ஆபீஸில் சேர்த்து அமைக்கப்பட்டுள்ள சேவாதாரிணி ஆபீஸில் வந்து நேரில் தெரிவித்துக் கொள்ளலாம்.

சென்னை அகில இந்திய வானொலி நிலையத்திலிருந்து பிப்ரவரி மாதம் 15-ம் தேதி ஒலி பரப்பப்பட்ட பிரசங்கம்.

ஷின் மலையில் சிக்னல் படையினரின் அருஞ் செயல்

ஷின் மலையில் 5000 அடி உயரத்திற்கு மேலே ஒரு ரோடு போகிறது. அங்கே சூரியனுடைய கதிர்கள் பாயவே, அதி சோபிதமாய் விளங்குகிறது. அதற்கும் மேலே, நான்கு கம்பி வேலிகள் மின்னுகின்றன. அதற்குத் தான் "பிளேவிட்ஸ் போஸ்ட்" என்று பெயர். அதற்கு அப் பெயரிட்டவர்கள் அந்த சிக்னல் படையினர் தான். இங்கே இரண்டு செங்குத்தான பாறைகள். இவற்றிற் கிடையே $1\frac{1}{4}$ மைல்களுக் கதிகமான இடை வெளி.

மழை மகா கடுமையாகப் பெய்து கொண்டிருந்தது. அங்கிருந்த ரோடு, மண் ரோடென்று தான் சொல்ல வேண்டும். இன்று அது உள்ள அகலந் தான் அப்போதும் அது இருந்தது. அங்கே பயனியர் படையினரின் உதவி கொண்டு ராயல் சிக்னல் படையினர் இயற்கையோடு இடைவிடாது போராடி, வெற்றி கொண்டனர். ஆகவே தான், பார்மாவிற் குள்ளும் போக்கு வரவு சாதனங்களை அமைக்க அவர்களால் முடிந்தது.

இந்த வேலையைச் செய்து கொண்டிருக்கும் போதே, பெரிய வழி காட்டிகள் கட்டப்பட்டன. இந்த ரோடு $4\frac{1}{2}$ மைல் நீளம், என்றாலும் அதன் வழியாகப் போய்ச் சேர $3\frac{1}{2}$ மணி நேரம் செல்லும். இந்த வழி நெடுக லெப்டினென்ட் ஆர். எச். ப்ளிவிட் தலைமையி லிருந்த படைகள் கட்டி முடித்தன.

பயனியர் பட்டாளத்தின் உதவியைக் கொண்டு 20 கஜ அகலத்திற்கு பூமியை உறுதிப்படுத்த வேண்டி யிருந்தது அதுவும் அடர்ந்த காட்டில். அப்போது தான் தந்திக் கம்பிகளைப் பிரித்து அவற்றை அமைக்க முடியும். சிறு காற்றடித்தாலும் கூட, அந்தக் கம்பிகள் $\frac{3}{4}$ மைல் தூரத்திற்கு வளைந்து கொடுக்கும். ஆகவே, தந்திக் கம்பிகள் அங்கே வளையாதபடி இறுகக் கட்டுவதற்கு 'இன்சுலேட்டர்கள்' உபயோகப்படுத்தப்பட்டன. தந்தி மரங்களைப் பூமியில் ஊன்ற வேண்டி யிருந்தது. பூமியோ பாறை. அதில் கடப் பாறைகளைக் கொண்டே பள்ளந் தோண்டி தந்தி மரங்களை யூன்றினார்க ளென்றால், அவர்களுடைய திறமை பெரிதும் பாராட்டுதற் குரிய தல்லவா?

மழை காலத்தில் சேற்றில் சக்கரங்கள் பதிந்து கொண்ட மோட்டார் ஒன்றை படையினர் தாமே கையால் வெளியேற்றாத இரவே கிடையாது என்னலாம். மலைமேலிருந்து 2,000 அடிகளுக்குக் கீழே யுள்ள பள்ளத் தாக்கிற்கு ஸ்டோர்ஸ் சாமான்களைக் கொண்டு போய்ச் சேர்ப்பதற்கு ஆட்களையே உபயோகிக்க வேண்டி யிருந்தது.

இந்த வேலையை ஒரே நாளில் மூன்றே பேர்கள் முடித்து விட்டனர். தந்தி மரங்களுக் கிடையில் இணைக்கப்பட்டிருக்கும் தந்திகள் வளைந்து கொடுக்காதபடி இருக்கின்றனவா என்று கண்டு பிடிப்பதற்கு தூர திருஷ்டிக் கண்ணாடிகளைக் கொண்டும், பேசுந் தந்தியைக் கொண்டும் கண்டு பிடித்து நேராக அமைக்கின்றனர்.

மோட்டார் பயிற்சி சாலைக்குத் தளபதி விஜயம்

மோட்டார்காரை ஒரு புதுமையாகக் காணும் கிராமங்கள் இன்னுமிருக்கின்றன. அந்தக் கிராமங்களில் இருந்து படைகளுக்குத் திரட்டப் பட்டவர்களில் சிலர், இப்போது மீரத்தில் மோட்டார்கார் ஓட்டும் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். சமீபத்தில் அங்கு சென்ற பிரதம தளபதி அவர்கள் பயிற்சி சாலையைப் பார்வை யிட்டனர்.

எல்லா வகை இராணுவ வண்டிகளையும் ஓட்ட அவர்கள் கற்பிக்கப்படுகிறார்கள். அங்கே ஒரு பெரிய மைதான மிருக்கிறது. அதில் அவர்கள் மனம் போனபடி யெல்லாம் பல வகை மோட்டார் கார்களையும் ஓட்டிப் பழகுகிறார்கள். மோட்டார் வண்டிகள் அங்கும் இங்கும், மலைமேலும் பள்ளத்தாக்கிலும், ஓடையிலும், தண்ணீரிலும் ஓட்டப் படுவதையும் நிறுத்தப் படுவதையும் பிரதம தளபதி பார்த்தார். இதைப் பார்ப்பவர்களுக்குச் சாதாரணமாக, எந்த வித நோக்கமு மில்லாமல் ஓட்டப்படுவதாகத் தான் தோன்றும். ஆனால், இது தான் உண்மையிலேயே சரியான பயிற்சி.

சிக்னல் படை யொன்று தமக்கு எவ்வளவு சிறந்த முறையில் பயிற்சி யளிக்கப் படுகிறதென்று அவருக்கு முன்னால் செய்து காட்டியது. இங்கே அவர்களுக்குத் தந்திப் பயிற்சியும், கம்பி யில்லாத் தந்திப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இவ்வளவு, சீக்கிரத்தில் சிவில் பள்ளிக் கூடங்களில் இவற்றை கற்றுக் கொள்ள முடியாது.

2-வது பஞ்சாபிப் பட்டாளம் பர்மா போரில் மகா திறமையோடு போராடியதாக முன்னணிப் படைத் தலைவர் ஒருவர் சமீபத்தில் மிகவும் பாராட்டிப் பேசியிருக்கிறார். இந்தப் படையின் பயிற்சி சாலையை, பிரதம தளபதி பார்வை யிட்டார். இனித் தாம் நடத்த வேண்டிய போராட்டத்திற்குத் தம்மை ஆயத்தம் செய்து கொண்டிருந்தார்கள். அங்கே, அவர் அந்தப் பயிற்சி சாலை உத்தியோகஸ்தர்களையும், வைசிராய் கமிஷன் உத்தியோகஸ்தர்களையும் சிப்பாய்களையும் கண்டு பேசினார். இவர்கள் சமீபத்தில் தான் பர்மாவி லிருந்தும் மத்தியக் கிழக்கி லிருந்தும் திரும்பி வந்தார்கள். ஹானரபில் காப்டன் ஹரிசிங், ஹானரபில் காப்டன் ரஹமத்கான் ஆகிய இருவருடைய நட்பையும் மீண்டும் புதிப்பித்துக் கொண்டார். இவ்விருவருடைய சேவகக் காலத்தையும் சேர்த்தால் 66 வருஷங்கள் ஆகிறது. பிறகு அந்தப் படையினரின் குழந்தைகளுக்காக நடத்தப்படும் பள்ளிக் கூடத்திற்குப் போனார். அங்கிருந்த ஆசிரியர்களோடு சிறிது பேசி, தற்காலக் கல்வி முறையைப் பற்றியும் தெரிந்து கொண்டார்.

அவர் பிரதமக் காரியாலயத்தின் வழியாகப் போகும் போது, தன்னிடம் முன்பு வேலை பார்த்து வந்த பலரைக் கண்டார். மலேரியா காய்ச்சல் வர ஒட்டாதபடி தடுக்கிற வேலையில் பிரதம தளபதிக்கு மிகவும் அக்கரை யுண்டு. அந்தப் படைத் தலைவரும் அவருக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்.

இவர் மீரத்தை விட்டுப் புறப்படு முன்பு இந்தியப் படைகளின் ஆஸ்பத்திரி, சோல்ஜர் இன்ஸ்டிட்யூட், சான்டேல், சோல்ஜர்கள் விடுதி, முதலியவற்றைப் பார்வையிட்டார். இந்த விடுதியின் காரியதரிசியான மிஸ ப்ராம்லியையும் அவருடைய சிப்பந்திகளையும் கண்டார்.



"ஹிமாலயா" என்னும் இந்தியப் போர்க் கப்பலைச் சேர்ந்த பயிற்சியிலுள்ள மாலுமிகள் மிகச் சுறுசுறுப்பாக அணிவகுத்து நிற்பதைக் கண்டு, வைஸ் அட்மிரல் ஜே. எச். காட்ப்ரே, சி. பி., ஆர். என்., புன் சிரிப்புக் கொள்ளுகிறார்.

யுத்த நெருக்கடியும் அரசாங்க உதவியும்

செங்கல்பட்டு ஜில்லா.—இம் மாதம், காஞ்சீபுரம், செங்கல்பட்டு டவுன்களில் ரேஷன் (பங்கீடு) திட்டம் அமுலுக்கு வந்து விட்டது. பிப்ரவரி 13 முதல் யாதொரு குறைவில்லாமல் பொது மக்கள் இலேசாக பெற்றுக் கொள்ளும்படி அனேக கடைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. பொதுவாக, அரிசி விலை சென்னையைப் போல் இருந்தாலும் இந்த டவுன்களில் நல்ல அரிசி சப்ளை செய்யப்படுகிறது.

இம்மாதம் திருவள்ளூர், பொன்னேரி முதலிய இடங்களில் இரண்டு நாட்டியக் கச்சேரிகள் நடந்தன. அவைகளை "கமலா ரஞ்சன்" கோஷ்டியார் நடத்தி வைத்தார்கள். சுமார் பதினாயிரம் ரூபாய்க்கு மேலாக வசூல் பணம் கிடைத்தது. இந்தத் தொகையை செங்கல்பட்டு ஜில்லா கலெக்டர் அவர்கள் இன்னும் சில தொகைகளோடு சேர்த்து, சுமார் இருபதினாயிரம் ரூபாய்க்கு மேலாக மேன்மை தங்கிய சென்னை கவர்னர் அவர்கள் செங்கல்பட்டுக்கு இம் மாதம் 10-ம் தேதி விஜயம் செய்தபோது, ராணுவ வீரர்களுக்கு பயன்படும்படியாக சமர்பித்தார்கள்.

செங்கல்பட்டில் மேன்மை தங்கிய கவர்னர் விஜயம் செய்த பொழுது, வீதிகள் நன்றாக அலங்கரிக்கப்பட்டிருந்தன. ஆங்காங்கே, கவர்னர் துரை அவர்களை நிறுத்தி யுத்த நிதிக்காக, பல சீமான்கள் பண முடிப்பளித்தார்கள். ராவ் பகதூர் வேதாசல முதலியார் அவர்கள் (செங்கல்பட்டு நகராண்மைக் கழகத் தலைவர்) ஓர் விருந்தளித்தார்கள்.

இந்த ஜில்லாவில் இப்பொழுது பயிர் செய்யப்பட்டிருக்கும் நன்செய் புன்செய் பயிர்கள் நன்றாக இருக்கின்றன. போதுமான நீர் வசதிகளும் இருக்கின்றன. வரும் சித்திரை அறுவடையில் நல்ல பலன் எதிர் பார்க்கப்படுகிறது.

வட ஆற்காடு ஜில்லா.—வட ஆற்காடு ஜில்லாவில் சென்ற மாதத்தில் தேசீயப் போர் முனையார், சிப்பாய் குடும்பத்தார்களை அவர்கள் கிராமங்களில் சந்தித்து, அவர்களுக்குள்ள குறைகளை நிவர்த்தி செய்திருக்கிறார்கள். ஜில்லா சிப்பாய் குடும்பப் பாதுகாப்பு சபையாரும் சிப்பாய் குடும்பங்களுக்கு வேண்டுவன செய்வதில் மிகவும் சிரத்தைக் கொண்டுள்ளார்கள். சிப்பாய் குடும்பங்களுக்கு உணவுப் பொருட்கள் சப்ளை செய்யும் டிப்போக்கள் மேலும் மேலும் திறந்து வைக்கப்படுகின்றன. சென்ற மாதத்தில் ஜில்லா கலெக்டர் அவர்கள் இத்தகைய புதிய டிப்போ ஒன்றை வேட்டவலத்தில் (திருவண்ணாமலை தாலுகா) திறந்து வைத்தார்.

அரிசி பங்கீடுத் திட்டம், வேலூர், திருவண்ணாமலை, குடியாத்தம், வாணியம்பாடி, திருப்பத்தூர், வாலாஜா முதலிய முனிசிபல் டவுன்களில் சென்ற மாதம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. சிற்சில கிராமங்களில் மக்களுக்குக் கொஞ்சம் கஷ்டமாக இருந்த போதிலும், இப்புதிய திட்டம் வெற்றிகரமாக நடக்கும்படி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. தேசீயப் போர் முனையாரும், இத்திட்டத்தை நடத்தும் அதிகாரிகளும், இத்திட்டத்தின் உண்மையான நோக்கத்தையும், இத் திட்டத்தினால் பொது மக்கட்கு ஏற்படும் நன்மைகளையும், எடுத்துக் கூறி பொது மக்களின் ஆதரவைப் பெற்று வருகிறார்கள். பொது மக்களும் சுய நலத்தை விட்டு உன்னத நோக்கங்கொண்டு, உத்தியோகஸ்தர்களுடன் ஒத்துழைத்து, திட்டத்தை வெற்றிகரமாக நடத்துவார்கள் என்பதில் சந்தேகம் வேண்டியதில்லை. இந்திய மக்கள் விருந்தோம்பும் மக்கள், "இந்திரர் அமிழ்தம் இயைவதாயினும், இனிதெனத் தமியர் உண்டலு மிலர்" எதையும் பங்கிட்டுண்ணும் பெருங் குண மக்களாகிய நாம், மக்கள் யாவருக்கும் உணவு கிடைக்கும் வகை செய்யும் இவ்வரிசிப் பங்கீடு திட்டத்தை வெற்றிகரமாக நடத்துவோமாக! நாம் எல்லாப் போர்ப் பணித் துறைகளிலும், பெரும் பங்கெடுத்து, அச்சு அரக்கர்களை அழித்து, மக்களுக்கு அமைதியையும், அன்பையும், அளிப்போமாக.

கூடாரத்தில் இந்தியப் படை ஆஸ்பத்திரி

தென்னிந்தியாவில் ஒரு இராணுவ ஆஸ்பத்திரி. அதன் சத்திர சிகிச்சை சாலை முதல், நோயாளிகளைக் கிடத்தியிருக்கும் கூடம் வரையிலும், கான்வஸ் துணியினாலான கூடாரங்கள் தான். 5 மாதங்களுக்குள் 700 சத்திர சிகிச்சைகள் அங்கே வெற்றிகரமாக நடைபெற்றிருக்கின்றன.

இந்த ஆஸ்பத்திரி மத்தியக் கிழக்குப் போர் முனையினின்று நல்ல தேர்ச்சியும் திறமையும் பெற்று, சிறந்த ஒற்றுமையோடும் கூட்டுறவோடும் வேலை செய்யும் இயல்பினரைக் கொண்டு, இங்கே இப்போது வந்திருக்கிறது. பாலைவனத்திலிருக்கும் போது, பிரிட்டிஷ், பிரஞ்சு, இந்திய, போலந்து, இத்தாலியப் படையினரைச் சேர்ந்தவர்களுக்கும் வைத்தியம் செய்தது.

இந்த ஆஸ்பத்திரியைச் சேர்ந்த அனைவரும் பிரிட்டிஷாரே. அதன் கூடாரங்களும் மற்ற எல்லாப் பொருட்களும் சேர்ந்து 600 டன் கனமிருந்தது. இங்கே சுமார் 700 பேர்கள் வேலை செய்து கொண்டிருந்தனர். நர்சுகள் மட்டும் 50 முதல் 90 பேர்கள் வரை இருந்தார்கள். சில நாட்களில் ஆஸ்பத்திரி முழுவதையுமே அப்புறப்படுத்தி விடலாம். சூயெஸ் கால்வாயிலிருந்து தென்னிந்தியாவிற்கு அந்த ஆஸ்பத்திரியைச் சேர்ந்தவர்களே அப்புறப்படுத்திக் கொண்டு வந்து சேர்த்தார்கள்.

இது ஒரு பெரு வெளியிலிருக்கிறது. இதன் தோற்றம் வரண்ட கடலையொத்திருக்கிறது. இதன் நீளம் 1 மைல், அகலம் $\frac{3}{4}$ மைல். இந்தியாவிலுள்ள பல பிரிட்டிஷ் ஆஸ்பத்திரிகளைப் போலவே, இங்கேயும் இந்தியப் படையினர் தான் பெரும்பாலும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்கள் இந்த ஆஸ்பத்திரியைப் பெரிதும் விரும்புகிறார்கள். எனவே, நோய் தீர்ந்து ஆஸ்பத்திரியினின்று நீக்கப்பட்ட பிறகுங் கூட, அடிக்கடி ஆஸ்பத்திரிக்கு வந்து தம் நண்பர்களைக் கண்டு கொண்டு போகிறார்கள்.

நோயாளிகளைக் கிடத்தியிருக்கும் ஒவ்வொரு கூடத்திலும் கான்வஸ் துணி விரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு கட்டிலின் மேலும் கொசுவலை சுருட்டி வைக்கப்பட்டிருக்கிறது. அங்குள்ள மேசைகளின் மேல், அழகான துணிகள் விரிக்கப்பட்டிருக்கின்றன அவற்றின் மேல் புத்தகங்களும் ஆட்டப் பொருள்களும் இருக்கின்றன. தம் கூடாரங்களைச் சுற்றி, நோயாளிகள் சிறு தோட்டங்களையும் அமைத்துக் கொள்ளுகிறார்கள்.

உணவு வேளையில் பிரிட்டிஷ் ஆஸ்பத்திரியைப் போல, இந்த ஆஸ்பத்திரி காணப்படுவதில்லை. உணவுச் சாலையில் உட்கார்ந்து சாப்பிட அவர்கள் விரும்புவதில்லை; ஆனால், இந்திய முறைப்படி கூட்டங் கூட்டமாக வெயிலில் உட்கார்ந்து கொண்டு தான் சாப்பிடுகிறார்கள். இதனால் உணவளிக்கும் 'சகோதரியார்' சில மைல்கள் தூரம் அதிகமாய் நடந்து போய் எல்லோருக்கும் ஏற்ற முறையில் உணவளிக்கப் பட்டிருக்கிறதா வென்று சோதிக்க வேண்டியிருக்கிறது. இப்படிச் சாப்பிடுவது அவர்களுக்கு விருப்பமானால், இந்த அதிகப்படி நடையைத் தாம் பொருட்படுத்துவதில்லை யென்று, அந்த 'சகோதரியார்' கூறுகிறார்கள்.

ஒருவரோடொருவர் பேசிக்கொள்ளுவதில் கஷ்டம் எதுவுமில்லை. உறுதுமொழியைத் தத்தித் தத்திப் பேசுகிறார்கள். தமிழுங் கூடத் தெரியும். இங்கிலீஷ் பேசக் கூடிய இந்தியர் யாரேனும் அங்கே இருந்து கொண்டுதானிருக்கிறார்கள். மொழி பெயர்த்துச் சொல்லும் வேலை பெரிதும் விரும்பத் தக்கது. இன்பகரமான ஆஸ்பத்திரியில், இந்த மொழி பெயர்ப்பாளர்கள், நோய் தீர்ந்த பிறகுங் கூட, சில நாட்கள் வரை நிறுத்தி வைத்துக் கொள்ளப்படுகிறார்கள்.

யுத்த நாட் குறிப்புக்கள்

பிரிட்டனும் ஜெர்மனியும்.

மார்ச்சு 1.—ஜப்பானியர் வயப்பட்டிருக்கும் நேச நாட்டினருக்கு அவர்கள் கொடுக்கும் உணவுப் பொருள் விகிதம் உயர்ந்திருக்கிற தென்று, தான் கூறக் கூடவில்லை யென்று, மிஸ்டர் ஈடன் காமன்ஸ் சபையில் கூறினர்.

மார்ச்சு 2.—பிரிட்டிஷ் யுத்த மந்திரி சர் ஜார்ஜ் க்ரிக், யுத்த நிலைமையைக் குறித்து காமன்ஸ் சபையில் ஒரு பிரசங்கம் செய்தார்.

மார்ச்சு 3.—இரண்டு ஜெர்மன் தளவாட கடற்கரைக் கப்பல்கள் செர்பரோ தீபகற்பகத்திற் கருகில் மூழ்கடிக்கப்பட்டதோடு ஒரு கப்பல் வெகுவாகச் சேதப் பட்டது.

அமெரிக்காவும், அட்லாண்டிக்கும்.

மார்ச்சு 2.—ஜூலை மாதம் 1-ம் தேதிக்குள் அமெரிக்கப் படைகளுக்கு 12 லட்சம் பேர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்று பிரிகேடியர் ஜெனரல் லூயி ஹர்ஷி கூறுகிறார்.

மார்ச்சு 3.—யுத்த சம்பந்தமாக விவாதிக்கும் பொருட்டு, அமெரிக்காவில் ஆக்டிங் மந்திரி மிஸ்டர் எட்வர்ட் ஆர். ஸ்டெட்டினியஸ் கூடிய சீக்கிரத்தில் லண்டனுக்குப் போவாரென்று பிரசிடென்ட் ரூஸ்வெல்ட் கூறுகிறார்.

கடன் குத்தகைச் சட்டத்தை இன்னமும் ஒரு வருஷ காலத்திற்கு அமுல் நடத்தாவிட்டால், யுத்தம் மேலும் நெடு நாட்கள் நடை பெறும்படி நேரலாமென்று அமெரிக்க யுத்த மந்திரி மிஸ்டர் ஹென்ரி ஸ்டிம்சன், பிரதிநிதிகள் சபையின் அந்நிய நாட்டு விஷயக் கமிட்டியார் முன் கூறினர்.

மார்ச்சு 4.—அர்ஜென்டைன் அரசாங்கத்தோடு தம் தொடர்பை அமெரிக்கா ரத்து செய்து கொண்டது.

இந்தியா, பர்மா, இலங்கை.

மார்ச்சு 1.—பிப்பிரவரி மாதம் 1-ம் தேதி முதல் 29-ம் தேதிக்குள் அரக்கான் போர் முனையில், 4,500 ஜப்பானியர்கள் கொல்லப்பட்டும் காயப்பட்டும் போனார்கள்.

இந்தியாவில் ஆஸ்திரேலிய ஹை கமிஷனராக நியமிக்கப்பட்டிருப்பவர் இந்தியப் படைகளைப் பெரிதும் பாராட்டிப் பேசினர்.

"இந்தியாவும் ஒரு நேசநாட்டு வெடி மருந்து சாலை தான்" என்று அமெரிக்க அந்நிய நாட்டுப் பொருளாதார நிர்வாகி மிஸ்டர் லியோ டி. க்ரௌலி இந்தியாவின் யுத்த முயற்சியைப் பாராட்டிப் பேசினர்.

மார்ச்சு 2.—சமீபத்தில் 14-வது படை அரக்கானில் அடைந்த வெற்றியைப் பாராட்டி லார்ட் லூயி மௌண்ட் பேட்டனுக்கு மிஸ்டர் சர்ச்சில் ஒரு பாராட்டுச் செய்தியை அனுப்பி யிருக்கிறர்.

பர்மா போராட்டததைக் குறித்து, பிரிட்டிஷ் யுத்த மந்திரி சர் ஜேம்ஸ் கிரிக் காமன்ஸ சபையில் குறிப்பிட்டார்.

மார்ச்சு 3.—மிஸ்டர் சர்ச்சில் விடுத்த பாராட்டுதலுக்கு நன்றி கூறி, லார்ட் லூயி மௌண்ட் பட்டன் ஒரு கடிதம் எழுதி யிருக்கிறர்.

மார்ச்சு 4.—மேன்மை தங்கிய வைசிராய் பிரபு, லார்ட் லூயி மௌண்ட்பேட்டனுக்கு ஒரு பாராட்டுச் செய்தி யனுப்பி யிருக்கிறர். ஜெனரல் ஸ்டில்வெல் தலைமையில், சீனப் படைகள் வர கண்டாங் என்னுமிடத்தைக் கைப்பற்றிக் கொண்டன.

ரஷ்யாவும், பின்லந்தும்.

மார்ச்சு 1.—ருசாகியையும் மேலும் 100 இடங்களையும் ரஷ்யப் படைகள் கைப்பற்றின.

சோவியத் விடுத்துள்ள சமாதான உடன்படிக்கையின் நிபந்தனைகள் பின்லாந்து மக்களுக்கு அறிவிக்கப்பட்டன.

மார்ச்சு 2.—பால்டிக் குடியரசுகளுக்காகப் போர் மும்முரமாக நடக்கிறது.

நார்வாவை ரஷ்யப் படைகள் வளைந்து கொண்டன. ஸ்கோபில் தெருப் போராட்டம் நடை பெறுகிறது.

மார்ச்சு 3.—க்ராஸ்னியே-ப்ருடி, ஷெலெ சோப்கி ஆகிய ஊர்களை சோவியத் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

ரஷ்யாவுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளுவதைக் குறித்து போலாந்து மாதிரி சபை வெகுவாக ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

இத்தாலியக் கடற்படையின் 1/3 பங்கை ரஷ்யாவுக்கு மாற்றிவிட வேண்டுமென்னும் திட்டத்தில் ஒரு பாதி நிறைவேறி விட்டது.

மார்ச்சு 4.—நார்வாவுக்கு மேற்கே பின்லாந்து வளைகுடா வரை சோவியத் படைகள் வந்து விட்டன

மார்ச்சு 5.—இஸ்லாலே செம்படைகள் கைப்பற்றி விட்டன.

இத்தாலி, ஆப்பிரிக்கா, மத்தியதரைக் கடல் பகுதி.

மார்ச்சு 2.—ரோமாபுரியில் கலை சம்பந்தமாகவும் மத சம்பந்தமாகவுமுள்ள பொருள்களைக் குறித்து யுத்த இலாக்காவின் கொள்கை என்ன என்பது பற்றி, அமெரிக்க யுத்த மந்திரி மிஸ்டர் ஹென்ரி ஸ்டிம்சன் வரையறுத்தார்.

மார்ச்சு 5.—சிஸ்டானு பகுதியில், தாக்கிய எதிரிகளை நேச நாட்டுப் படைகள் தடுத்து விரட்டின.

விஷி, சுயேச்சை பிரான்சு, எதிரிகள் வயப்பட்ட நாடுகள்.

மார்ச்சு 1.—ஆஸ்திரிய எல்லைப்புரத்தை யொட்டி, யூகோஸ்லாவ் பார்டிசன் கட்சியார் போராடிக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

மார்ச்சு 2.—ஜெனரல் அய்சினேவருடைய படைகள் பிரான்சைத் தாக்கும் போது, நேச நாட்டினருக்குச் சாதகமாகக் கிளம்புகிறவர்களை ஒடுக்க ஜெர்மன் படைகள் மகா கடுமையான முறைகளைக் கையாளுமென்று பிரஞ்சு பிரதம மந்திரி மிஸ்டர் லவால் பிரஞ்சு மக்களை எச்சரித்திருக்கிறர்.

மார்ச்சு 3.—கிரீசில் மாறுபட்டிருந்த கொரில்லாக்களுக் குள்ளாக ஒப்பந்தம் ஏற்பட்டு, அதில் கையெழுத்தும் ஆகி விட்டது.

பிரான்சின் வீழ்ச்சிக்குப் பிறகு அதைச் சேர்ந்த பல வியாபாரக் கப்பல்களை பிரிட்டனும், அமெரிக்காவும் கேட்டு வாங்கிக் கொண்டன. பிரஞ்சு நாட்டு மீட்சிக் கமிட்டியாருக்கு இவை திருப்பிக் கொடுத்து விடப் படுமென்று அமெரிக்க யுத்தக் கப்பல் நிர்வாகி அறிவிக்கிறர்.

ஜெனரல் ஜிராடுடைய மூத்த மகள் மடேம் க்ராய்கர் ஜெர்மன் சிறையிலேயே இறந்து விட்டார். அவருடைய மக்கள் இன்னும் ஜெர்மன் சிறைகளில் தான் இருக்கிறர்கள்.

நடு நிலைமை நாடுகள்.

மார்ச்சு 1.—துருக்கிக்குப் பிரிட்டனிலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் போய்க் கொண்டிருந்த சப்ளைகள் மத்திய கிழக்குப் பகுதிகளிலிருந்து போகவில்லை யென்று தெரிகிறது.

வாடிகன் நகரத்தின் மீது வெடி குண்டுகள் விழுந்தன.

தூரக் கிழக்கு நாடுகள்.

மார்ச்சு 1.—அட்மிரால்டி தீவுகளில் நேச நாட்டினர் இறங்கி விட்டனர். அவற்றுள் ஒன்றான லா நீக்ரோஸ் என்னும் தீவில் ஜெனரல் மக்கார்தர் இறங்கி, பாழடைந்திருந்த ஒரு விமான நிலயத்தைப் பார்வையிட்டார்.

மார்ச்சு 2.—ஜப்பானிய விமானந் தாங்கிக் கப்பல் (7,000 டன்) ஒன்றை பிரிட்டிஷ் நீர் மூழ்கிக் கப்பல் தாக்கி மூழ்கடித்து விட்டதாக, பிரிட்டிஷ் கப்பற் படை யிலாக்கா அறிவிக்கிறது.

யுத்த நிலைமையைக் குறித்து டோக்கியோவிலுள்ள ஜெர்மன் ஸ்தானீகரும் ஜப்பானிய அந்நிய நாட்டு மந்திரியும் கலந்து பேசினர்கள்.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.